திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை இலாக்கா ரி-ஆர்கனைசேஷன் செய்யப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருப்பது சர்க்காருக்கு தெரியுமா? அவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறைபாடுகள் சில இருக்கின்றன என்பது உண்மை. ஆனாலும் வளர்ச்சிக்கான திட்டங்கள் விரிவடையும் பொழுது இந்தக் குறைபாடுகளை மாற்றும் ஆற்றல் அந்தந்த அமைப்புகளுக்கு ஏற்படும். எனவேதான் வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துகிறோம். வளர்ச்சி ஏற்பட ஏற்பட குறைபாடுகள் குறைவதற்கு வழி காண முடியும்.

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்.

*35. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது உள்ள அரசு சார்புடைய ஆடு வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான்கு ஆடு வளர்ப்புப் பண்ணைகள் தமிழகத்தில் உள்ளன.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றனவா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றனவா என்று அறிவிப்பதுடன், அப்படி அரசு சார்பில் நடத்தும் இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் இருந்தாலும், தனியார்களுக்கும், விவசாயிகளுக்கும் தனிப்பட்ட முறையில் உதவி செய்து ஆடு வளர்ப்புத் திட்டத்தை அமல்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்துமா ? அவர்களுக்கு மானிய உதவி, கடன் உதவி செய்து ஆடு வளர்ப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பண்ணைகள் நடத்துவது என்பது வியாபார நோக்கத்தோடு இருக்கக் கூடாது என்பது அகில இந்தியாவில் கால்நடைத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. தனியார் வளர்க்கும் ஆடுகளின் தரத்தை மேம்படுத்தவும், தேவையான பொலியாடுகளை வளர்க்கவும், சின்ன சேலத்திலும், முகவை மாவட்டம் சாத்தூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்திலும், நீலகிரி மாவட்டம் சந்தியநல்லாவிலும் ஆட்டுப் பண்ணைகள் நடக்கின்றன. இன்றைக்கு விவசாயிகள் ஆடு வளர்க்க விரும்பினால் கூட்டுறவு முறையில் பண்ணை ஏற்படுத்த உதவி செய்யப்படுகிறது. இப்படி எந்த அளவிற்குப் பொதுமக்கள் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவிற்குச் செய்யப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மேய்ச்சேரி என்ற இடம் செம்மறி ஆட்டிற்குப் பெயர் பெற்ற இடம். ஆகவே, சேலம் மாவட்டத்தில் ஆட்டுப்பண்ணை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஆனால் சேலத்திற்குப் பக்கத்தில் சின்ன சேலத்தில் ஆட்டுப்பண்ணை நடக்கிறது. மேலும் தேவைப்பட்டால் ஆட்டுப் பண்ணை வைத்து வளர்க்க முயற்சிக்கலாம்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 4 இடங்களில் ஆட்டுப்பண்ணைகள் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தெந்த இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான்கு இடத்தையும் சொன்னார்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : இந்த ஆட்டுப்பண்ணைகளை நன்றாக அமல் செய்வதற்கு மத்திய சர்க்கார் மானியம் அளிக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்தகைய பண்ணைகள் அமைந்து அவை இப்பொழுது சரியாக இயங்குவதற்கு எல்லாவிதமான சீர்திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சிக் குழு பரிசீலனை செய்து சீர்திருத்தங்களை வழங்கியிருக்கிறது. அவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இலாக்கா நடவடிக்கை எடுக்கிறது. அதே நோக்கில் மத்திய சர்க்கார் நம் நாட்டு ஆட்டு இனத்தின் தரத்தை உயர்த்த—நம்முடைய நாட்டிலுள்ள ஆடுகளின் தரம் அவ்வளவு நல்லதாக இல்லை என்பதால்—காரிடேல் என்னும் இன ஆடுகளைக் கொண்டு கலப்பு இனத்தை உண்டாக்கும் முயற்சிக்கு உதவுகிறது. அப்படிப்பட்ட இனத்தினால் மிகுந்த இறைச்சி கிடைக்கவும், கம்பளி கிடைக்கவும் பல ஆராய்ச்சிகள் இன்றைக்கு நடக்கின்றன.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ மனைகள்

*36. வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அருள்கூர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உள்ளிருப்புச் சிகிச்சைக்காக உள்ள அரசு மருத்துவ மனைகள் எவை ?

(இ) அவற்றின் மொத்த படுக்கைகள் எவ்வளவு ?